**சுருக்கம்**

தொழில் துறை – 2015–2016ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பு – தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் – ''குளோரைடு நீக்கும் திட்டத்தினையும்'' (Chloride Removal System) மற்றும் இரசாயன மீட்பு கொதிகலனில் இருந்து வெளியேறும் வெண்புகையினை குளிர்விக்கும் திட்டத்தினையும் (Vapour Condensing System) 2015–16 மற்றும் 2016–17 ஆண்டுகளில் நிறுவுதல் – அனுமதி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தொழில் (எம்.ஐ.டி.2) துறை**

**அரசாணை (டி) எண். 174** **நாள் : 21.09.2015**
மன்மத, புரட்டாசி–4,
திருவள்ளுவர் ஆண்டு –2046

**ஆணை :**

2015–2016ஆம் ஆண்டிற்கான தொழில் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்து துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

> "சுற்றுச் சூழலை மேலும் மேம்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், இரசாயன மீட்பு கொதிகலன் சாம்பலின் குளோரைடு உப்பின் அடர்த்தியை குறைக்க ''குளோரைடு நீக்கும் திட்டத்தினையும்'' (Chloride Removal System) மற்றும் இரசாயன மீட்பு கொதிகலனில் இருந்து வெளியேறும் வெண்புகையினை குளிர்விக்கும் திட்டத்தினையும் (Vapour Condensing System) 2015–16 மற்றும் 2016–17 ஆண்டுகளில் ரூபாய் 20 கோடி செலவில் நிறுவும்".

2. மேற்காணும் திட்டத்தினை தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் தனது சொந்த நிதி ஆதாரங்களைக் கொண்டு நடைமுறைகளில் உள்ள விதிகளைப் பின்பற்றி குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைபடுத்த அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது. இத்திட்டத்தின் வளர்ச்சி குறித்து மாதந்தோறும் அரசுக்கு அறிக்கை அனுப்புமாறு தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் பணிக்கப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ச. வி. சங்கர்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

பெறுநர்:
துணை மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்,
67, அண்ணா சாலை,
கிண்டி, சென்னை – 32.
நகல்:
மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்து துறை அமைச்சர் அவர்கள்,
சென்னை–600 009.
தொழில் (அ.ந.மு.2/வ.செ.தி.1) துறை, சென்னை–600 009.
இ.கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

**பிரிவு அலுவலர்**